## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.267/2023.

Prosecution witness for P.W. 7 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திருமதி. கனகலட்சுமி.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 19.01.2023 அன்று முற்பகல் 11.30 மணியளவில் அதே கல்லூரியில் பணியில் இருந்தபோது பாண்டி என்பவரின் பிரேதத்தை காவலர் விஜி என்பவர் தூத்துக்குடி தெற்கு காவல்நிலைய குற்ற எண் 49/2023 ல் பிரேத விசாரணைக்காக ஆய்வாளர் வேண்டுகோள் கடிதத்துடன் கொண்டு வந்தார். நான் நண்பகல் 12 முதல் 12.40 மணி வரையில் உடற்கூராய்வு செய்தேன். உடல் முழுவதும் பிணவிறைப்புத் தன்மை இருந்தது. முதுகுப் பகுதியில் மரணத்திற்கு பிந்தைய ரத்த தேக்கம் நிலையாக காணப்பட்டது. கண்கள் இயல்பாக இருந்தது. இயற்கை துவாரங்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை. மேற்படி பிரேதத்தில் கீழ்க்கண்ட மரணத்திற்கு முன் ஏற்பட்ட காயங்கள் இருந்தன.

1. 3x2cm அளவுள்ள சிராய்ப்பு காயம் இடது முழங்காலில் இருந்தது.

2. மார்பின் நடுப்பகுதியில் 3x2cmx எலும்பு அளவு ஆழமுள்ள குத்துக்காயம் மார்பு எலும்பை துளைத்து இதய உறை வரை சென்றுள்ளது.

3. மார்பின் நடுப்பகுதியில் 1x0.5cmx எலும்பு அளவு ஆழமுள்ள குத்துக்காயம் இடது மூலைகாம்பிற்கு 9 செமீ தள்ளியிருந்தது.

4. மார்பின் நடுப்பகுதியில் 4x1cmx எலும்பு அளவு ஆழமுள்ள குத்துக்காயம் இருந்தது.

5. முலைக்காம்பிற்கு 10 செமீக்கு கீழே 6x3cmx எலும்பு அளவு ஆழமுள்ள குத்துக்காயம் இருந்தது.

6. வலது மார்பில் 3x1cmx எலும்பு அளவு ஆழமுள்ள குத்துக்காயம் இருந்தது.

7. கழுத்தின் முன்புறத்தில் 1x0.5cm அளவில் 3 நகக்கீரல்கள் இருந்தன.

8. வலது இடுப்பில் 5x3cmx வயிற்றறை வரை உள்ள ஒரு குத்துக்காயம் இருந்தது. அந்த குத்துக்காயத்தின் வழியே சிறுகுடல் வெளியே வந்திருந்தது.

9. தொப்புளுக்கு 1 செமீக்கு கீழே 1x1x0.5cm அளவுள்ள குத்துக்காயம் காணப்பட்டது.

10. வலது முழங்கையில் மூட்டு விலகியிருந்தது.

11. வலது இடுப்பில் 1x0.5x0.5cm அளவில் குத்துக்காயம் இருந்தது.

12. இடது அக்குள் நடுக்கோட்டில் 3x2cmx எலும்பு அளவு ஆழமுள்ள குத்துக்காயம் இருந்தது.

13. வலது தலையில் பக்கவாட்டு பகுதியில் 16x2cm அளவில் பழைய வளைவு கீரல் காயம் இருந்தது.

தலைத்தோல் இயல்பாக இருந்தது. மண்டை ஓடு இயல்பாக இருந்தது. மூளை இயல்பாக இருந்தது. மூளை உறைகள் இயல்பாக இருந்தது. கழுத்து, வாய், தொண்டை, குரல்வளை, காற்றுக் குழாய் இயல்பாக இருந்தது. நாவடி எலும்பு இயல்பாக இருந்தது. மார்பு, விலா எலும்புகள், உணவுக் குழாய், மூச்சுக் குழாய் இயல்பாக இருந்தது. இடது மார்பறையில்

சுமார் 500 மிலி அளவுள்ள ரத்தம் மற்றும் ரத்த உறைவு இருந்தது. வலது மார்பறை காலியாக இருந்தது. நுரையீரல்கள் குறுக்கு வெட்டுத் தோற்றத்தில் வெளிறி இருந்தது. இரு நுரையீரல்களும் மார்பு சுவற்றுடன் ஒட்டிக் கொண்டிருந்தன. இதய உறையில் சுமார் 5 மிலி அளவுள்ள மஞ்சள் நிற திரவம் இருந்தது. இதய கீழ் அறையில் 4x1cm அளவுள்ள குத்துக்காயம் இருந்தது. முக்கிய ரத்த நாளங்கள் இயல்பாக இருந்தது. வயிற்றறை இயல்பாக இருந்தது. வயிற்றுக் குழியில் சுமார் 250 மிலி அளவுள்ள ரத்தம் கலந்த திரவம் இருந்தது. வயிற்றில் சுமார் 300 கிராம் அளவுள்ள மஞ்சள் நிறத்தில் ஓரளவு செறிமானமான உணவு இருந்தது. சிறுகுடலில் சுமார் 20 கிராம் அளவுள்ள மஞ்சள் நிறத்தில் ஓரளவு செறிமானமான உணவு இருந்தது. வயிற்றறை சவ்வு மற்றும் சிறுகுடல் சவ்வு வெளிறி காணப்பட்டது. கல்லீரலில் 3x1x1cm அளவுள்ள குத்துக்காயம் இருந்தது. குறுக்கு வெட்டுத்தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. மண்ணீரல் வெளிறி காணப்பட்டது. கணையம் இயல்பாக இருந்தது. சிறுநீரகங்கள் இயல்பாகவும், குறுக்கு வெட்டுத்தோற்றத்தில் வெளிறியும் காணப்பட்டது. சிறுநீர்ப்பையில் சுமாா 10 மிலி அளவுள்ள சிறுநீர் இருந்தது. இடுப்பு உறுப்புகள் இயல்பாக இருந்தது. தண்டுவடம் இயல்பாக இருந்தது. பிரேதத்திலிருந்து உள்ளுறுப்புகள் ரசாயன பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்டு திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. ரத்த மாதிரி சேகரிக்கப்பட்டு ரசாயன பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. மேற்படி நபர் அவருக்கு மார்பு பகுதியில் ஏற்பட்ட குத்துக்காயங்களினால் ஏற்பட்ட கடுமையான ரத்தப்போக்கு மற்றும் அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக பிரேத பரிசோதனைக்கு முன்பாக சுமார் 12 மணி முதல் 24 மணி நேரத்திற்குள் இறந்திருக்கக்ககூடும் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய பிரேத

பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ 7**. மேற்படி உள்ளுறுப்புகளில் நச்சுத் தன்மை எதுவும் இல்லை என்று நச்சியல் அறிக்கையை பார்த்துவிட்டு நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.சா.ஆ 8**. கத்தி போன்ற கூர்மையான ஆயுதங்களால் தாக்கும்போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.267/2023.

Prosecution witness for P.W. 8 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சுடலை முத்து. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகைப்பட பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தட்டப்பாறை காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது அயல்பணியாக புகைப்படப்பிரிவில் இருந்தபோது 18.01.2023 அன்று இரவு சுமார் 9.30 மணியளவில் மாவட்ட தனிப்பிரிவில் இருந்து கைபேசி அழைப்பு வந்தது. அதன்படி கிருபை நகர் மிலிட்டரி கேன்டின் அருகில் ஒரு பிரேதம் இருப்பதாகவும், அதை புகைப்படம் எடுக்க வேண்டுமென்றும் ஆய்வாளர் கேட்டுக் கொண்டார். நான் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள கேமராவில் புகைப்படம் எடுத்து நிலைய கணினியில் பதிவேற்றம் செய்து குறுந்தகடில் பதிவு செய்து ஆய்வாளருக்கு கொடுத்தேன். அந்த புகைப்படங்கள் **அ.சா.ஆ 9 வரிசை** (எண்ணிக்கையில் 8). அதற்கான பிரிவு 65 பி–ன் படியான சான்றிதழ் **அ.சா.ஆ 10**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் மேற்படி இடத்திற்கு போகவில்லை என்றும், புகைப்படமும் எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பிரேதத்தை புகைப்படம் எடுக்கவில்லை. அங்கு சம்பவ இடத்தையும், அங்கிருந்த உடைகளையும் புகைப்படம் எடுத்தேன். இந்த வழக்கிற்காக பின்யோசனையின்பேரில் மேற்படி ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நிலைய புள்ளி விபரத்திற்காக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.267/2023.
Prosecution witness for P.W. 9 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. முத்து.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது போக்சோ நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணியில் இருந்தபோது 02.02.2023 அன்று தெற்கு காவல்நிலைய குற்ற எண் 49/2023 வழக்கு சம்பந்தமான ரத்தம்பட்ட சட்டை, ட்ரவுசர், லுங்கி, ஜட்டி ஆகியவற்றையும், உள்ளுறுப்புகளையும் பெற்று வழக்கு சொத்துக்களுக்கு PR.No.80/2023 என்று எண்ணிட்டு நீதிமன்ற பொறுப்பில் வைத்தேன். ஒரு சைக்கிள், ஒரு ஜோடி கருப்பு நிற செருப்பு, தார் சாலையின் ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படாத துண்டுகள், ஒரு கத்தி, டீ சர்ட், ஷார்ட்ஸ், முழுக்கை சட்டை, அரைக்கால் ட்ரவுசர் ஆகியவற்றையும் நான் மேற்படி PR.No. மூலமாக பெற்றுக் கொண்டேன். வழக்கு சொத்துக்களையும், பிரேதத்திலிருந்து சேகரிக்கப்பட்ட உள்ளுறுப்புகளையும் ரசாயன பரிசோதனைக்காக நீதிமன்ற உத்தரவின்படி திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பினேன். மேற்படி படிவங்கள் 91 **அ.சா.ஆ 11 வரிசை** (எண்ணிக்கையில் 7), மேற்படி ஒரு ஜோடி செருப்பு **சா.பொ.4**. மேற்படி ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படாத தார் சாலையின்

துண்டுகள் **சா.பொ.5 மற்றும் 6**. மேற்படி முழுக்கை சட்டை, அரைக்கால் ட்ரவுசர், லுங்கி, ஜட்டி, மற்றொரு முழுக்கை சட்டை ஆகியவை **சா.பொ. 7 முதல் 11**. மேற்படி ஆய்வகத்திற்கு கொடுக்கப்பட்ட நீதிமன்ற கடிதம் **அ.சா.ஆ 12**. அதற்கான ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ 13**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

மேற்படி படிவம் 91ல் வழக்கு சொத்துக்களை முழுமையாக நான் விவரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆயுதங்களின் வடிவங்கள் மற்றும் வகைகள் ஆகியவற்றையும் நான் தெளிவாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக போலீசாரால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களுக்காக மற்றும் வழக்கு சொத்துக்களுக்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

I Additional District & Sessions Judge,
Thoothukudi.